# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 Aug 2018 Issue - 8


ஆசிரியர் உரை

## என் ஆத்துமாவைத் தேற்றி...

தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கும் பரிசுத்த வேதாகமத்தில் நாட்டமும், ஈடுபாடும் கொண்ட யாராவது ஒருவரிடம், வேதாகமத்தில் உங்களுக்குப் பிடித்தமான எதாவது ஒரு பகுதியை மனப்பாடமாகச் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கேட்டால், மிகப்பெரும்பாலோர் உதடுகளில் சட்டென வந்து நிற்பது சங்கீதம் 23 ஆகத்தான் இருக்கும். ஏனெனில், மொழி, இனம், நிறம், தேசம் என்று எல்லாப் பாகுபாடுகளையும் கடந்து, உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவக் குடும்பங்களில் இச்சங்கீதம் சிறு பிராயம் முதல் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும். ஒருவேளை, சிறப்பான இச்சங்கீதத்தின் உள்ளார்ந்த பொருள் பற்றிய ஆழமான புரிந்து கொள்ளுதல் இல்லாவிட்டாலும், இதிலுள்ள வார்த்தைகள் மிகவும் பழக்கப்பட்டவைகளாக இருக்கும்.

இச்சங்கீதம், **தேவன் நமக்கு முற்றிலும் போதுமானவராக இருந்து, நம்முடைய எல்லாத் தேவைகளையும் சந்திக்கிறவர்** என்று எடுத்துரைப்பதோடு, தேவன் மீது ஏன், எப்படி முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பதற்கான விளக்கவுரையாகவும் உள்ளது. ஆடுகளை மேய்ப்பது பற்றிய முழுமையான அனுபவம் தனக்கு இருந்தபடியால், கர்த்தரை மேய்ப்பராகவும், தன்னை ஓர் ஆடாகவும் பாவித்து அந்த அற்புத உறவின் அனுகூலங்களை அணுஅணுவாக உணர்ந்து இச்சங்கீதத்தை வடித்திருக்கிறார்.

ஓர் ஆறு வசனங்களை மாத்திரம் கொண்ட இச்சீர்மிகு சங்கீதத்தின் மூன்றாம் வசனம் தான், **அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்** என்பது. வசனம் இரண்டு, கர்த்தர் எப்படி ஒரு நல்ல மேய்ப்பாராக இருந்து, சரீரப்பிரகாரமாக தன் ஆடுகளை ஆகாரப்படுத்தி, பாங்காய் வழிநடத்துகிறார் என்பது பற்றிப் பேசுகிறது. அப்படியே வசனம், மூன்றிற்கு வரும் போது, சரீர நல்வாழ்வு சம்பந்தமான

வழிநடத்துதலோடு நிற்காமல், ஆவிக்குரிய நல்வாழ்வு சம்பந்தமாகவும் அவர் காரியங்களைச் செம்மையாகச் செய்கிறார் என்று கூறுகிறது.

நம்முடைய தமிழ் வேதாகமத்தில் உள்ள ''தேற்றி'' என்ற வார்த்தைக்கு பதிலாக ''மீட்டு'' அல்லது ''திரும்ப எடுத்து'' போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் இன்னும் பொருத்தமானதாக இருந்திருக்கும். எப்படியெனில், இச்சங்கீதம் எழுதப்பட்ட மூலமொழியாகிய எபிரெயத்தில், இச்சொல்லுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தை ''மேஷிபா'' என்பது. இதன் நேரடிப்பொருள் மீட்டு, திரும்ப எடுத்து, திரும்பக் கொண்டுவருதல் என்பது அல்லது பொருளின் அடிப்படையில் தான், நம் இரட்சகராகிய இயேசு புதிய ஏற்பாட்டில் காணாமல் போன ஆடு பற்றிய உவமையை சொல்லியுள்ளார் (லூக். 15:4-7) ஆம். அந்த உவமையில், மேய்ப்பன், 99 ஆடுகளை வனாந்திரத்தில் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டு, காணாமல் போன ஓர் ஆட்டைத் தேடி அலைகிறான். கண்டுபிடித்தபின்பு, சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களில் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வந்து, காணாமல் போன ஆடு கண்டுபிடிக்கப்பட்டதின் நிமித்தம், ஏனைய எல்லோரோடும் சேர்ந்து சந்தோஷப்படுகிறான் என்றுள்ளது. இதுதான், மேஷிபா என்ற வார்த்தைக்கான பொருள். காணாமல் போனதைக் கண்டுபிடிப்பது, இழந்து போனதை மீட்பது, திரும்பக் கொண்டு வருவது போன்றவை.

சரி, இந்த மேஷிபா என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் ஒரு மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆம், சங்கீதம் 80:19, ரூத் 4:15, மற்றும் I ராஜாக்கள் 17:21,22 ஆகிய வசனங்களில் இவ்வார்த்தையைப் பயன்படுத்த சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை ஆவியானவர் அனுமதித்திருக்கிறார். ஆயினும், இந்த மூன்று இடங்களிலும், இவ்வார்த்தை சம்பந்தப்பட்ட பொருள் ஒரே விதமாக இல்லாமல் வெவ்வேறு நிலைகளில் அணுகப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த மூன்று வசனங்களிடம் சென்று, நமக்கு கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

**I. சீர்கெட்ட நிலையிலிருந்து கர்த்தராலே திருப்பிக் கொண்டு வர முடியும்.**

மேஷிபா என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் இடங்களில் ஒன்றான சங்கீதம் 80:19-லிருந்து நம்மாலே கற்றுக்கொள்ள முடிகின்ற பாடம், சீர்கெட்ட நிலையிலிருந்து கர்த்தராலே திரும்ப முடியும் என்பது.

சங்கீதம் 80-ன் ஆசிரியர் யார் என்று நமக்குச் சொல்லப்படவில்லை. ஆனால், வடக்கு இராஜ்ஜியத்தின் வீழ்ச்சியின் போது, சிறையிருப்பிற்கு தப்பித் தாய்மண்ணில் தங்கிவிட்ட ஒருவனாலே தேவனை நோக்கி முறையிட்டுப் பாடப்பட்ட ஒன்றாகத் தெரிகிறது. இச்சங்கீதத்தின் வசனத்தில் தேவன், இஸ்ரவேலின் மேய்ப்பராகச் சித்தரிக்கப்படுகிறார். தேவன்

இஸ்ரவேலின் மேய்ப்பர்தான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இஸ்ரவேல் ஜனங்கள் திருட்டு ஆடுகளாக இருந்திருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சனை. வடக்கு இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் அசீரியாவிடம் வீழ்ச்சி அடைவதற்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாக, எலியா தீர்க்கனிடம் தேவன் மிகுந்த நம்பிக்கையோடு பாகாலுக்கு முழங்காலிடாத 7000 பேரை மீதியாக வைத்திருக்கிறேன் என்றார் [Iராஜா 19:18]. பத்துக் கோத்திரங்களைக் கொண்ட ஒரு பெரிய ராஜ்ஜியத்தில் 7000 என்பது குறைவாக எண்ணிக்கையாக இருந்தாலும், மிகுந்த பொறுமையோடு ஒட்டுமொத்த தேசம் மனந்திரும்பும்படியாக தேவன் இரண்டு நூற்றாண்டுகள் காத்திருந்தார். ஆனால், விக்கிரக வணக்கத்திலும், பொய்யான ஆராதனையிலும் அத்தேசம் பிறந்து [I ராஜா 12:28-33] விக்கிரக வணக்கத்திலே ஊறி, வளர்ந்து, தேவ விரோதக் காரியங்களில் திளைத்து வாழ்ந்த படியால், தடம் புரண்ட நிலையிலிருந்து அவர்கள் மீளவே இல்லை. விளைவு அடிமைத்தனம். ஆம், தேவ தயவு அங்கு அற்றுப்போனபடியால், சீர்கெட்ட நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அப்பொழுது வழக்கம் போல தேவனை நோக்கி கூப்பாடு. முறையீடு வசனங்கள் 3,7,14 மற்றும் 19 களில் இச்சங்கீதகாரன் **சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், உமது முகத்தை பிரகாசிக்கப் பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்** என்கிறான். இதன் மூலம் சீர்கெட்டுப் போன நிலையிலிருந்து கர்த்தர் தான் காப்பாற்ற முடியும் என்று அறிவிக்கிறார். ஆனால் இஸ்ரவேலின் ஜனங்களுக்கோ அறிவில்லாமல் போயிற்று. தனி ஒருவனின் விண்ணப்பம் ஊக்கமானதாக இருந்தாலும். ஒட்டு மொத்த தேசம் மனந்திரும்பப் பிடிவாதமாக மறுத்தபடியால் அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பவும் இல்லை, தங்கள் சுதந்திரத்தின் மண்ணை மீண்டும் மிதிக்கவும் இல்லை, இப்படிக் கடின இருதயம் கொண்டு சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து மறைந்து வீணாகிப் போனவர்களைக் குறித்துப் பேசுவதை இதோடு நிறுத்திவிட்டு, இன்றைய நாளில் வாழும் நமக்கு இதிலிருந்து ஏதாகிலும் கிடைக்கிறதா என்று பார்ப்போம்.

அன்பானவர்களே! பரலோகத்தின் தேவன், சீர்கெட்ட நிலையிலிருந்து ஒருவனை மீட்கக்கூடியவராக, திருப்பக் கூடியவராக இருக்கிறார் என்பதை நாம் இங்கே புரிந்து கொள்ள வேண்டும். அப்படி மீட்பது கர்த்தராலே தான் முடியும் என்பதையும் இச்சங்கீதக்காரன் பகிரங்கப்படுத்தியுள்ளார். சீர் கெட்ட நிலை என்பது சரீர வாழ்க்கையோடும் சம்பந்தப்படுகிறது, ஆவியின் வாழ்க்கையோடும் சம்பந்தப்படுகிறது. சரீர வாழ்வு அற்ப ஆயுளைக் கொண்டது. ஆவியின் வாழ்க்கை காலங்களைக் கடந்தது. இயேசு ஆண்டவர் ஆவிக்குரிய நிலையில் சீர்கெட்டு இழந்து போன நிலையிலிருந்து மானிடத்தை மீட்கும்படியாகவே இப்பூமிக்கு வந்தார் [லூக்கா-19:10]. அன்றைக்கு சீர்கெட்ட நிலையில் வாழ்ந்தவர்கள் ஒரு தேசத்தார்தான். ஆனால், இன்று ஒட்டு மொத்த உலகமும் ஆத்தும வாழ்வில் சீர்கெட்ட நிலையில் தான் உள்ளது. பவுலடியார் ரோமபுரிக்கு சொல்லும் போது இப்படியாகக் குறிப்பிடுகிறார். **எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி...**

என்று [ரோமர் 3:23] இப்படிக் கெட்டுப் போன எல்லோரையும் இரட்சிக்கும் படியாகப் பூமிக்கு வந்த தேவ குமாரனாகிய இயேசு மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது [மத் 4:17] என்று பிரசங்கித்ததோடு, வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் என்று கூவி அழைக்கிறார் [மத் 11.8]. இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் வேறு யாராவது ஒருவர் கொடுக்கும் அழைப்பை கணக்கில் கொள்ளலாமா? என்று எண்ணுபவர்களுக்கு பதிலாக நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார் [யோவான் 14:6].

அருமையானவர்களே, அப்படியானால் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? நானே நல்ல மேய்ப்பர் என்று சொல்கிற இயேசுவானவர், தாவீது போற்றும் மேய்ப்பனைவிட, அதாவது, தாழ்ச்சியடையாமல் பாதுகாத்து, புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்களண்டையில் வழிநடத்தும் கர்த்தராகிய மேய்ப்பரை விட, ஒருபடி மேலே சென்று நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கக்கூடியவராக இருக்கிறார் [யோவான் 10:11]. இப்பூலோக வாழ்வின் சரீரத் தேவைகளுக்குச் சகல நன்மைகளையும் குறைவில்லாமல் செய்வேன் என்று வாக்களித்ததோடு [மத்-6:33] ஆன்மீக வாழ்வில் நம்மை மீட்டெடுக்கும்படியாய் தன் ஜீவனையும் கொடுத்திருக்கிறார் [எபே 5:2]. தம்முடைய சரீர வாழ்வு சம்பந்தமான தேவனுடைய மற்றும் இயேசு ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை நாம் முழுமையாக நம்பலாம். ஏனெனில், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். இது குறித்துப் பவுலடியார், நம்முடைய சந்தேகங்களுக்கு சாவுமணி அடிக்கும்படியாய் எப்படிக் கூறுகிறார் பாருங்கள், தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பாதப்படி? என்று [ரோமர் 8:32].

ஆகையால், கர்த்தராகிய மேய்ப்பரையும், இயேசுவாகிய நல்ல மேய்ப்பரையும் நம்பிப் பின்பற்றி, நம்முடைய சரீர வாழ்வையும், ஆன்மீக வாழ்வையும் பாங்காக அமைத்து ஆவியிலும், சரீரத்திலும் சீரான வாழ்வு வாழ்வோமாக!

## II. துக்கம், துயரங்களிலிருந்து கர்த்தராலே திருப்ப முடியும்

மேஷிபா என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் இடங்களில், இரண்டாவதாக வரும் ரூத் 4:15 லிருந்து, நம்மாலே கற்றுக்கொள்ளமுடிகின்ற பாடம், துக்கம், துயரங்களிலிருந்து கர்த்தராலே நம்மைத் திருப்ப முடியும் என்பது.

வெறுமனே நான்கு அதிகாரங்களைக் கொண்ட 'ரூத்' சரித்திர நூல், ஓர் அழகான சம்பவத்தை உள்ளடக்கிய ஒன்று. நியாயாதிபதிகளின் ஓர் இருண்ட காலத்தில் அன்பு, பக்தி, மீட்பு இவைகளைத் தத்ரூபமாக இந்நூல் பேசுகிறது. மெய்யான தேவனைப் பின்பற்றும் இஸ்ரவேல் மக்களோடு தன்னையும் இணைத்துக் கொள்வதற்காக, ஆதியாகமம் 12 ம் அதிகாரத்து ஆபிரகாமைப் போல் செயல்பட்டவள். ஆம், தன் சொந்த ஜனங்கள்

தேவன் மீது நம்பிக்கை வைத்து வாழாத ஒரு காலகட்டத்தில் இந்த அந்நியப் பெண் தன்னை முற்றிலும் நம்பி செயல்பட்டபடியால், தேவன் அதற்கு பலனாக இந்த மோவாபிய ஸ்திரீக்கு பது வாழ்க்கையையும், ஒரு குமாரனையும், தாவீது மற்றும் இயேசுகிறிஸ்துவின் ஜனன வரிசையில் நீங்காத இடத்தையும் தந்தார். ஆம், தாவீதுக்கு இவள் முப்பாட்டி (மத்தேயு 1:5).

இந்நூலின் ஊடே வரக்கூடிய வசனம், அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து: சுதந்திரவாளி அற்றுப் போகாத படிக்கு இன்று உனக்கு தயை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவன் பேர் இஸ்ரவேலிலே பிரபலமாகக்கடவது. அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர்வயதில் உன்னை ஆதிரிக்கிறவனுமாயிருக்கக்கடவன். உன்னைச் சிநேகித்து ஏழு குமாரரைப் பார்க்கிலும் எனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். (ரூத் 4:14,15) பதினைந்தாம் வசனத்தில் ஆதரிக்கிறவன் என்ற வார்த்தைக்குத் தான் மூலமொழியில் மேஷிபா என்றுள்ளது. அதாவது, கர்த்தர் மீட்கிறவர், திருப்புகிறவர் என்று.

இந்தப் பொருளின் அடிப்படையில் நகோமியின் முந்திய வாழ்க்கையை திரும்பிப் பார்ப்போம். தேசத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினிமிர்த்தம், தன் கணவனாகிய எலிமெலேக்கின் அவிசுவாசமான முடிவுக்கு கட்டுப்பட்டு, தன் இரண்டு மகன்களோடு அப்பத்தின் வீடாகிய பெத்லகேமை விட்டுவிட்டு மோவாப் தேசத்துக்கு போனாள். அங்கே தன் கணவனை இழந்து கைம் பெண்ணாகி, கைம்பெண்ணுக்கே உரிய சவால்களை எதிர் கொண்டு, தடம் புரண்ட குடும்பத்தை தண்ட வாளத்தில் ஏற்ற முயற்சித்து, இரண்டு மகன்களுக்கும் அங்கேயே பெண் கொண்டாள். தண்டவாளத்தில் ஏற்றப்பட்ட குடும்ப வண்டி அடுத்த சில வருடங்களில் பெரும் விபத்தையே சந்தித்து மக்லோன், கிலியோன் என்னும் இரண்டு மகன்களும் இறந்து போனார்கள். மூன்று விதவைப் பெண்களடங்கிய அக்குடும்பத்தின் துஅவலநிலையை எண்ணிப் பாருங்கள். ஒரு கட்டத்தில், நீங்கள் என்னை நகோமி, அதாவது என் மகிழ்ச்சி என்று சொல்லாமல் மாராள் என்று சொல்லுங்கள், சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார் என்றதோடு நிற்காமல், கர்த்தர் என்னை சிறுமைப் படுத்தியிருக்கிறார், கிலேசப்படுத்தியிருக்கிறார் என்றெல்லாம் சலித்துக்கொண்டாள். இந்த வார்த்தைகள் அவள் எவ்வளவு துயரத்திலும், துக்கத்திலும் அமிழ்ந்து போயிருந்தாள் என்பதையே காட்டுகிறது.

இந்த நகோமியைப் பார்த்துத்தான் ஸ்திரீகள் தேவனுடைய பராமரிப்பின்படியும் (ரூத் 2:20) நகோமியின் ஆலோசனைப் படியும்(3:5) மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் பெற்றெடுத்த ஓபேத் அவள் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனாகவும், முதிர் வயதிலேயே அவளை ஆதரிப்பவனாகவும் இருப்பான் என்றார்கள். (ரூத் 4:14,15) துயரத்திலும், துக்கத்திலும் இருந்த நகோமியை தேவன் எப்படி மீட்டுக் கொண்டார் என்று பாருங்கள்!

அருமையானவர்களே, இந்த தேவன் தான் நாம் நம்பிக்கொண்டிருக்கிற தேவன். சர்வவல்ல இந்த தேவன், தனக்கே தெரிந்த ஒரு நோக்கத்திற்காகவோ, பின்னாளில் நாம் நினைத்தே பார்க்காத ஒன்றை நாம் சுதந்தரிக்கும்படியாகவோ அல்லது நம்முடைய விசுவாச பெலவீனத்தினிமித்தமாகவோ சில கட்டங்களில் நாம் துன்பம், துயரம் போன்றவைகளுக்குள்ளே கடந்து போகச் செய்தாலும், அவைகளினின்று நம்மை மீட்டு எடுக்கவும், அவைகளை நமக்கு அனுகூலமாக மாற்றவும் வல்லவராயிருக்கிறார். இந்தப் பொருளின் அடிப்படையில்தான், பவுலடியார், **அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்** (ரோமர் 8:28) என்றார்.

நம்முடைய இரட்சராகிய இயேசுவானவர், இப்பூலோக பயணத்தை நிறைவு செய்யும் தருவாயில், தான் தெரிந்து கொண்ட சீடர்களோடு உரையாடுகிறார். அங்கே, தன்னுடைய மரணம் உயிர்த்தெழுதல் பற்றிக் குறிப்பிட்டு, **இன்னும் கொஞ்சகாலம் நான் உங்களுடனே கூட இருப்பேன்** என்று சொன்னதைக் கேட்டுக் கலக்கமடைந்த சீடர்களிடம்.... நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும், உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் என்றார் யோவான் 16:20.... ஆம், துக்கத்தை சந்தோஷமாக மாற்ற அவரால் முடியும். இந்த உண்மையைப் பவுலடியார் உணர்ந்திருந்தபடியால் தான், **அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களை தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்** (II கொரி–1:10) என்றார்.

ஆகவே, இப்பூலோக வாழ்வின் பாடுகளையும், சவால்களையும் குறித்துக் கலங்காமல் **மேஷிபா** தேவன் நம் மோடிருக்கிறார் என்பதை உணர்ந்து நம் பக்தி வாழ்க்கையை நடத்துவோம்.

III. **மரணத்திலிருந்து கர்த்தராலே திருப்ப முடியும்.**

**மேஷிபா** என்னும் வார்த்தை பயன்படுத்தபட்டிருக்கும் இடங்களில், மூன்றாவதாக வரும் I ராஜாக்கள் 17–21,22 வசனங்களிலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், மரணத்திலிருந்து கர்த்தராலே மீட்க முடியும் என்பது.

திஸ்பியனாகிய எலியா மற்றும் சாறிபாத் ஊர் விதவை சம்பவம் கிறிஸ்தவ சமுதாயம் அறிந்த ஓர் நிகழ்வு தான். கர்த்தருடைய வார்த்தையின்படி கேரீத் ஆற்றங்கரையில் எலியா ஒளிந்து கொண்டிருந்த வேளையில், ஆற்றின் நீர் வற்றிப்போன படியால், சாறிபாத் ஊருக்குப் போகும்படி கட்டளைபெற்று அங்கு போனான். மிகுந்த தயக்கத்தோடு அந்த தேவ மனிதனை ஏற்றுக்கொண்ட அக்கைம்பெண், எலியாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியால், பஞ்சம் தீரும் மட்டும் பானையிலேமா. செலவழிந்து போகவும் இல்லை, கலசத்திலே எண்ணெய் குறைந்து போகவுமில்லை (I ராஜா17:1–16).

சாறிபாத் அம்மாவைப் பொறுத்தளவில் இது வரைக்கும் காரியங்கள் ஜம் ஜம் என்று போயிற்று. ஆனால், இவைகள் நடந்த பின்பு, அந்த விதவைத் தாயின் மகன் வியாதியில் விழுந்து, சுவாசம் போகும் மட்டும் வியாதி அதிகரித்து ஒரு கட்டத்தில் மரித்தே போனான். சும்மா இருப்பாளா பெற்றவள்? இந்த தேவ மனிதனாலே தான் பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்பட்டேன் என்பதையெல்லாம் மூட்டை கட்டி மூலையிலே வைத்து விட்டு, என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனை சாகப் பண்ணவுமா? என்னிடத்தில் வந்தீர் என்று கேட்டு எலியாவை நிலைகுலைய வைத்தாள்.

எச்சூழலையும் எதிர்கொள்ளப் பழக்கப்பட்ட எலியா, அவனை அவள் மடியிலிருந்து எடுத்து, மேல் வீட்டிலுள்ள கட்டிலின் மேல் கிடத்தி, கர்த்தரைக் கூப்பிட்டு, அந்தப் பிள்ளையின் மேல் மூன்று தரம் குப்புற விழுந்து; என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப் பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அங்கே கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையின் ஆத்துமா அவனுள் திரும்பி வந்தது; அவன் பிழைத்தான் [I ராஜா 17:1722]. கர்த்தர் விதைவையின் மகனுடைய பிரிந்து போன ஆத்துமாவை அவனுள் கொண்டுவந்தார். சரீரப்பிரகாரமான ஒரு மேய்ப்பன், தன்னுடைய ஆடுகளின் காயங்களைக் கட்ட முடியுமேயொழிய, செத்துப்போன ஓர் ஆட்டிற்கு உயிர் கொடுக்க முடியாது. ஆனால், கர்த்தராலே அதைச் செய்ய முடியும்.

தேவக்குமாரனாகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கச் செய்யும் வல்லமையுடையவராக இருக்கிறார். இப்பூலோக வாழ்க்கையில் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்த நாட்களில் மரித்தோரை உயிரோடு எழச் செய்திருக்கிறார். நாயீன் ஊர் விதவையின் மகன் [யோவான் 7:11], யவீருவின் மகள் [மத்தேயு.9:18,23] பெத்தானியா லாசரு [யோவான்11:43] என்று. ஏதோ இந்த மூன்று பேரைத்தான் இயேசுவால் எழுப்ப முடிந்தது என்று எண்ணிவிடாதீர்கள். யோவான் 5–ம் அதிகாரத்திற்குச் சென்றால் அதிர்ந்து போவோம். ஆம், இயேசு தன்மையிலும், வல்லமையிலும், அதிகாரத்திலும் பிதாவுக்குச் சமமாக இருக்கிறார் என்று பேசும் அப்பகுதியில் இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்றுள்ளது [யோவான் 5:28,29].

இயேசுவின் இரண்டாம் வருகையில் நடக்கும் காட்சி இப்பகுதியில் முன்னுரைக்கப்பட்டுள்ளது. மரித்துப்போன அனை வரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு எழுந்திருப்பார்கள். இதே விதமான காட்சியைக் குறித்து பவுலடியார் தெசலோனிக் கேயருக்கு எழுதும் போது, ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரிந்தவர்கள் முதலாவது

எழுந்திருப்பார்கள் என்கிறார் [Iதெச4:16]. இதன் மூலம், பவுலடியார் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப் போகிறவர்களைக் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், கிறிஸ்துவுக்குள் மரிக்காதவர்கள் என்று பிரிக்கிறார் [வெளி 14:13] இன்னும் கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று கூறுகிறது.

நல்ல மேய்ப்பராகிய இயேசு மரித்தவர்களை மீட்டெடுக்க வல்லவராயிருக்கிறார். அப்படி மீட்டெடுக்கும் போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை முதலாவது மீட்டெடுக்கப் போகிறார். ஏனெனில், அவர்கள்தான் பாக்கியவான்கள் அவர்களைப் பார்த்துத் தான் வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் [மத் 25:34] என்று சொல்லப் போகிறார்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் மரிக்க வேண்டுமானால் முதலாவது, அவர் கிறிஸ்துவுக்குள் வர வேண்டும். பிறகு கிறிஸ்துவுக்காய் மரணபரியந்தம் வாழ வேண்டும். பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானம்தான், ஒருவனைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது [கலா 3:27] அந்த ஞானஸ்நானத்திற்கு முன்பாக ஒருவன் விசுவாசிக்க வேண்டும் [மாற்கு 16:15:16]. மனந்திரும்ப வேண்டும்[அப்.2:38]. இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்ய வேண்டும் [ரோமர்10:10] கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இப்படிச் செய்வதன் மூலம் கர்த்தர் அவனைத் தாம் வாக்களித்துக் கட்டின [மத் 16:18] ஒன்றான மெய்சபையில் சேர்த்துக் கொள்ளுவார் [அப்-2:47]. அச்சபையில் அங்கமாக இருந்து மரிக்கிறவர்கள் தான் கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள்.

அப்படியானால், இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் எப்படி மரிக்கப் போகிறோம் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுவோம். மேஷிபா தேவன் நம் அனைவரோடும் இருப்பாராக! ஆமென்!! ஆமென்!!!

★

## வெற்றிக்கு முதல் ஐந்து காரியங்கள்

- நாளில் முதல் மணி நேரத்தை தேவனுக்கு கொடுங்கள்.
- வாரத்தின் முதல் நாளை தேவனுக்கு கொடுங்கள்.
- வருமானத்தின் முதல் பகுதியை தேவனுக்கு கொடுங்கள்.
- முடிவுகள் எடுக்கும் போது, முதலாவது முன்னுரிமை தேவனுக்கு கொடுங்கள்.
- உங்கள் இருதயத்தில் முதல் இடத்தை தேவனுக்கு கொடுங்கள்

# தேவன் இன்று மனிதனுடன் எவ்வாறு பேசுகிறார்?

Bro. J.C. சோட்

எழுதப்பட்டுள்ள வசனத்திற்கு மாறாக தனிப்பட்ட மனிதனிடம் இன்று தேவன் நேரடியாகப் பேசுவதாக அநேக மக்கள் நம்புகின்றனர். தேவன் என்னுடன் பேசி, இதை இதைச் செய்யச் சொன்னார் என்றோ, அல்லது இந்தந்தக் காரியங்கள் நடக்கும் என கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார் என்றோ அவர்கள் பொதுவாக கூறுகின்றனர். ஆனால் இந்த மாதிரியான வழிகளில் தேவன் என்னிடம் பேசுகிறதில்லை; உங்களில் யாரிடமாவது இப்படி தேவன் பேசுகிறாரா? சிலரிடம் மாத்திரம் அவர் நேரடியாக பேசி சில சத்தியங்களை வெளிப்படுத்தும் போது, மற்றவர்களிடம் அவர் அவ்வாறு பேசுவதில்லை என்றால் அது தேவனைப் பாரபட்சமுள்ள வராக்காதா? இந்த மாதிரியான காரியத்திற்குள் நாம் அதிகமாக செல்லு முன், வேதகாமம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் பார்க்கலாம்.

வித்தியாசமான காலங்களில் தேவன் வித்தியாசமான வழிகளில் பேசியிருக்கிறார் என்பது உண்மையே. ஆதியில் பிதாக்களிடம் அல்லது குடும்பத் தலைவர்களிடம் அவர் நேரடியாகப் பேசினார். அதன் மூலம் தேவன் கூறியவற்றை தங்கள் குடும்பங்களுக்கு அவர்கள் சொன்னார்கள். அதன்பின் தீர்க்கதரிசிகளின் மூலமாக தேவன் பேசினதை அவர்கள் மக்களுக்குத் தெரிவித்தனர். இறுதியாக, தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்து வழியாக தேவன் பேசினார். இவை அனைத்தையும் மனதில் வைத்துக்கொண்டு தான் எபிரேய எழுத்தாளர் இவ்விதம் கூறினார்: பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் (எபி. 1:1,2).

பேதுரு அறிவித்தார் : நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் . இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்றேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்ற போது, அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பர்வதத்திலிருக் கையில், வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக் கேட்டோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு.

பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடைய தாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை . தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1:16–21).

முதலாவதாக கர்த்தர் தங்களுக்கு முன்பாக மறுரூபமான காலத்தை பேதுரு குறிப்பிட்டார் என்பதையும், பரலோகத்திலிருந்து, ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்கு செவிகொடுங்கள் ... (மத்.17:5) என்று கூறியதையும் அவர்கள் கேட்டனர் என்பதையும் கவனியுங்கள். கிறிஸ்துவைப் பற்றி யோவான் எழுதும் போது, அவர் வார்த்தையாக இருந்தார் . தேவனிடமிருந்து வார்த்தையை அளித்திட அவர் வந்தார் என்று நாம் படிக்கிறோம். ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் (யோவான் 1:1,2). இந்த புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடர்களுக்கு முன்பாக செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20:30,31).

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட படியே எல்லா பரிசுத்த மனிதர்களும் பேசியதாக பேதுரு அறிவிக்கிறார். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதிறுள்ளவனாகவும் இருக்கும் படியாகவும்.அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்த்தீருத்தலுக்கும், நீதிக்கு படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது (II தீமோ 3:16,17) என்று பவுல் சொல்கிறார். வேதவாக்கியங்கள் ஏவப்பட்டு எழுதப்பட்டதாக பவுல் குறிப்பிடும் போது, பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட மனிதர்களை ஏவி வசனத்தை எழுதச் செய்தார் என்பதை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். எழுதுவதற்கு அவர் அவர்களுக்கு உதவினார் அல்லது வழி நடத்தினார். அது வாய்மொழியால் ஏவப்பட்டிருக்கிறது. அது மனிதனுடைய வார்த்தை அல்ல, அவை தேவனுடைய வார்த்தை, எனவே, எநத நற்கிரியையும் செய்ய மனிதனை அது தகுதியுள்ளவனாக்குகிறது. மனிதனுக்கு தாம் எதைச் சொல்ல வேண்டுமென்று தேவனுக்கு தெரியும், அதைச் சொன்னார். பரிசுத்த ஆவியானவர் அதை எழுதும் படியாகவும் ஏவினார் அல்லது வழிநடத்தினார். பேதுரு மேலும் எழுதும் போது, தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய

திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி (IIபேதுரு 1:3) என்றார். ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டியவற்றையும் கர்த்தர் நமக்கு கொடுத்துள்ளதைக் கவனியுங்கள். அவர் அதை எப்படி செய்திருக்கிறார்? அவருடைய வசனத்தின் வழியாகத்தான் செய்துள்ளார்.

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டனர். பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொடுப்பதற்காக அவர்கள் மேல் கைகளை வைத்தனர். சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்தவும் இது நடந்தது. ஏனெனில், அந்த நேரம் வரை புதிய ஏற்பாடுகள் எழுதி முடிக்கப்பட்டு மனிதன் கையில் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. பூரணமானது வரும் போது அற்புதங்கள் ஒழிந்து போகும் என பவுல் கூறும் போது, புதிய ஏற்பாடு வருவதையே அவர் குறிப்பிடுகிறார். இறுதியில் வார்த்தை பூரணமாக கொடுக்கப்பட்டது. எனவேதான் யாக்கோபு இவ்விதமாக அறிவித்தார்: சுயாதீனப் பிரமாணமாகிய பூர்ணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக். 1:25). அவர் மேலும் கூறினார்: அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன் படி செய்கிறவர்களையும் இருங்கள் (யாக் 1:22).

இந்த வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்து போகாது என இயேசு கூறினார்: வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை (மத்தேயு 24:35). பின்னர் பேதுரு சொன்னார்: கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்: உங்களுக்கு சுவிஷேமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (I பேதுரு 1:25). யோவான் எழுதினார். இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்கிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவபுத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்ட வைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் ( வெளி, 22:18,19).

எனது நண்பர்களே! ஏமாறாதீர்கள். தேவனுடைய விருப்பத்தை நீங்கள் அறிய விரும்பினால், எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய புதிய ஏற்பாட்டுக்குத் திரும்புங்கள். இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதையும், நீங்கள் எந்த சபையில் இருக்கக் கர்த்தர் விரும்புகிறார் என்பதையும், அவரை நீங்கள் ஆராதிக்கும் வழியையும் எப்படி வாழ வேண்டு மென்பதையும் அதில் நீங்கள் கற்றுக் கொள்ள முடியும். கர்த்தர் ஏற்கனவே பேசியிருக்கிறார். நண்பர்களே, அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தினவற்றை நாம் கேட்டு நடப்பது மட்டுமே நமக்குப் போதுமானதாக இருக்கிறது.

உங்களை கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறதைக் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்: வேறொரு சுவிசேஷம் இல்லையே: சிலர் உங்களை கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை புரட்ட மனதாயி ருக்கிறார்களே யல்லாமல் வேறல்ல. நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன்சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்: நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வாயிருக்கக்கடவன் (கலாத்தியர் 1:6–9) என்று பவுல் சொன்னார்.

மேற்சொன்ன சகல வசனங்களிலிருந்தும், வேத எழுத்துக்கள் தேவனிடமிருந்து வந்தது என்றும், பூரணமாக எழுதப்பட்டு அவை மனிதனுக்கு தரப்பட்டுள்ளது என்றும், அவை மட்டுமே நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் பாதுகாப்பாக உள்ளன என்றும் தெரிகிறது. பவுல் நமக்கு சொல்லுகிறார்: ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினலே வரும் என்று (ரோமர் 10:17). அவர் குறிப்பிடும் தேவனுடைய வார்த்தை எது? புதிய ஏற்பாட்டில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும், தேவனுடைய எழுதப்பட்ட வசனங்கள் மட்டுமே.

இன்று புதிய வெளிப்படுத்துதல்களை தேவன் தருகிறாரா? நம்மில் பலருக்கு சொல்லாத சில காரியங்களை வித்தியாசப்பட்ட சிலரிடம் அவர் இன்று சொல்லிக் கொண்டிருக்கிறாரா? நிச்சயமாக கிடையாது. தேவனுடைய சகல வெளிப்படுத்துதல்களும் நம்மிடம் இன்று இல்லாமல், அவர் மேற்கொண்டு தமது விருப்பத்தை சில மனிதர்களுக்கு வெளிப்படுத்தி கொண்டிருப்பாரேயானால், வேதகாமத்தில் பயன் என்ன? மேலும், ஒருவனிடம் ஒன்றைச் செய்யச் சொல்லுவதும், மற்றொருவனிடம், அதற்கு முரணான வேறு ஒன்றைச் செய்யச் சொல்லுவதும் அவர்களுக்கு குழப்பமான காரியமாகாதா? எனது நண்பர்களே, அவருடைய வார்த்தையைத் தவிர்த்து அதற்கு கூடுதலாக இன்று தேவன் யாரிடமும் பேசவில்லை என்பதை நமக்கு இது உறுதிப்படுத்துகிறது. ஆனால், அற்புதங்கள், அந்நியபாஷை சம்பந்தமாக தேவன் தங்களிடம் நேரடியாக பேசுகிறார் என உரிமை கொண்டாடும் மக்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடாக பேசுகின்றனர் என்பதை கவனியுங்கள். தேவனுக்கு விரோதமானவர்கள் என ஒருவருக்கொருவர் கூற்றஞ்சாட்டுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதன் உண்டாக்கிய, மனிதப் பெயர்களை தாங்கிய, வித்தியாசப்பட்ட சபைகளிலே அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். தேவன் அனுமதிக்காத வழிகளில் ஆராதனை செய்து வருகின்றனர். தேவன் உண்மையிலேயே இவர்களிடம் பேசிக் கொண்டிருந்தால் இம்மாதிரியான காரியங்களைச் செய்ய அவர் கூறமாட்டார். ★

பெண்கள் பகுதி

# பூரணம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு ஸ்தோத்திரம். இம்மாதமும் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து பாடங்களைக் கற்க தேவன் கொடுத்த மாபெரும் சிலாக்கியத்திற்காக நன்றி செலுத்துவோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மலையிலே அதாவது, மத் 5,6,7 ஆகிய அதிகாரங்களில் அவர் பிரசங்கித்த, வரலாற்றுச் சிறப்புமிக்க, காலத்தால் அழியாத பொன் மொழிகளாகிய அவ்வார்த்தைகளை மலைப் பிரசங்கம் என்றழைக்கிறோம். அதில் 5 ம் அதிகாரம் 48 ம் வசனத்தில் ..... பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் என்று வாசிக்கிறோம். பூரணம், முழுமை இரண்டும் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் கொண்ட வார்த்தைகள் தான். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் பூரண குணங்களைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அநேக நல்ல குணங்கள் வெதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அதை நாம் பெற்றுக் கொண்டால், முழுமையான கிறிஸ்தவப் பெண்களாகத் திகழ முடியும்.

முழுமையான குணம் என்றால் என்ன? முழுமை அல்லது பூரணமடைவதற்கு தேவன் எந்த வகையிலாவது உதவி செய்திருக்கிறாரா? முதல் வினாவிற்கு விடை ஒரு வரியில் சொல்லிவிட முடியாது. ஆனால், இரண்டாம் வினாவிற்கு விடை ஆம் என்பது தான். நமக்கு என்னென்ன தேவை என்பதை நன்கு அறிந்த நம் அன்புள்ள தேவன் நாம் முழுமை பெற தேவையான அனைத்து அறிவுரைகளையும் போதுமென்கிற அளவுக்கு கொடுத்திருக்கிறார்.அதை நாம் செய்தாலே போதும்.

தேவனுடைய பார்வையிலே முழுமை அல்லது பூரணமுள்ளவர்களாக நாம் இருப்பதற்கு ஒரு மூன்று வேத பகுதிகளை தெரிந்து கொள்வோம். [கலாத்தியர் 5:22 24; கொலோ 3 ;12-14; பேதுரு 1:5-9] இந்த வசனப் பகுதிகள் உயரிய குணங்களை நமக்குக் காட்டுகிறது. அவைகள் அனைத்தையுமே நாம் கைக் கொண்டால்தான் முழுமையான கிறிஸ்த பெண்மணிகளாக திகழ முடியும். அவைகளில் விசுவாசம் மற்றும் அன்பு ஆகிய குணங்களைப் பற்றி இம்மாதம் பார்ப்போம்.

ஒரு பூரணமான வாழ்வுக்கு ஆஸ்திபாரமாய் விளங்குவது விசுவாசம். விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்தவே முடியாது. (எபி 11:6). கிறிஸ்து வாழ்வின் மூலைக் கல்லே இது தான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், நம் பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்தார் என்றும், நாம் விசுவாசிக்காவிட்டால் நம் கிறிஸ்தவ வாழ்வே ஓர் அடித்தளம் இல்லாமல் அசைந்து, ஆட்டம் காண்கின்ற ஒன்றாக மாறிவிடும். எப்படி இந்த விசுவாசத்தை பெற்றுக் கொள்ள முடியும்? ரோமர்: 10:17ன் படி விசுவாசம் கேள்வி யினாலே வரும். வசனத்தைக் கேட்க வேண்டும். கேட்டுக் கடை பிடிக்க வேண்டும். இதை நாம் செய்யாமல் இருந்தால் எந்த ஒரு நற்குணத்தையும் நாம் கூட்டிக் கொள்ளவே முடியாது. விசுவாசத்தை ஒரு பிசினோடு ஒப்பிடலாம். பிற நல்ல குணங்களை நம்மோடு ஒட்ட வைப்பதற்கு விசுவாசம் பிசின் போல உதவுகிறது. இது வல்லமை பொருந்தியது. ஏனென்றால், அதன் மூல ஸ்தலமே வல்லமை பொருந்திய ஒன்று. இதை ஒதுக்கிவிட்டு பயன் படுத்தாமல் இருந்தோமானால் தேவனுடைய வல்லமையும் நம்மை அணுகாது. நாம் இரட்சிக்கப்படவே முடியாது.

அடுத்தது, அன்பு. ஒரு கிறிஸ்தவனுக்கு வெளிப் படையாக, தனித்துவம் பெற்று நிற்க வேண்டிய ஒன்று அன்பு. அன்பு என்று ஒன்று இல்லாமல் வேறு எத்தனை நல்ல குணங்கள் இருந்தாலும் அவைகளால் எந்தப் பயனும் இல்லை. உலகத்தில் உள்ள எல்லோரிடமிருந்தும் நம்மை உயர்த்திக் காட்டுவது இந்த அன்பு. அன்புக்கென்றே இருக்கும் Iகொரி: 13ம் அதிகாரத்தில் அன்பு எல்லாவற்றையும் விட பெரியது என்று பார்க்கிறோம். விசுவாசம் விலைமதிப்பானது, அவசியமானது. நம்பிக்கை தாங்குகிறது, முக்கியமானது. ஆனால் அன்பு அழியாதது. அன்பு தேவனைப் போன்றது. பரலோகத்தில் கிறிஸ் தவர்களின் விசுவாசம் அங்கே பார்க்கப்பட்டு விடுகிறது. நம்பிக்கை அங்கே நிஜமாகி விடுகிறது. அவைகள் இரண்டும் அங்கே முடிவடைந்து விடுகிறது. ஆனால், அன்பே அழிந்து போவதாக இருக்காது. தேவனுடைய சந்நிதியில் அது ஆளுகை செய்து கொண்டே இருக்கும். சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிகளுக்குமிடையே என்றென்றும் எடுத்துக் காட்டாக இருந்து கொண்டே யிருக்கும். அன்பு தேவனால் உண்டாயிருக்கிறவன். அன்புள்ளவன் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக் கிறான் (Iயோவான் 4:7).

அன்பு தேவனுக்கு நம்மை கீழ்ப்படிய ஊக்கு விக்கிறது. யாரையெல்லாம் சந்திக்கிறோமோ, நண்பர்கள், பகைவர்கள் என்றில்லாமல் யாவருக்கும் நன்மை செய்ய வைக்கிறது. அன்பு அமைதியாய் எதுவும் செய்யாமல் சோம்பேறித் தனமாய் இருக்கிறது.

நம் வாழ்க்கையில் நல்ல செயல் வீரர்களாக நம்மை மாற்றுகிறது. அன்பு கொடுக்கிறது. அன்பு செயல்படுகிறது. தேவன் நம்மில் எவ்வளவு அன்பு காட்டினால் தன் ஒரே குமாரனை நமக்கு கொடுத்திருப்பார்? நான் எல்லோரிடமும் அன்பு கூருகிறேன் என்று சொல்லி அப்படி செய்யாமல் இருந்தால் நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம். நம் வார்த்தை, செயல், இப்படி அனைத்துமே அன்பால் மெருகூட்டப்பட்டு நம்மை வழி நடத்த அனுமதிக்க வேண்டும். பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பு என்று கொலோ 3:14 ல் காண்கிறோம். தேவனுடைய பார்வையிலே நாம் பூரணராக இருக்க வேண்டும் என்று எண்ணினால் அன்பு தான் பிரதான பண்பாக நம் வாழ்க்கையில் வெளியே தெரியும்.

இன்னும் பல குணாதிசயங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் பெற்றுக் கொண்டு பூரணமான வாழ்வு வாழ வேண்டு மென்றால் அன்பை தரித்துக்கொள்ளவேண்டும். அன்பு என்பது உலக அன்பு அல்ல. தெய்வீக அன்பு. பரிசுத்தமான அன்பு. பிழையற்ற அன்பு. இவைகள் தான் ஏற்றுக் கொள்ளப் படும். எனவே பூரணமான வாழ்வை விரும்பும் நாம் யாவரும் இப்பண்புகளை பெற்று பயன்படுத்துவோம். ஆமென். ★

---

**ஆராய்ந் 'தேன்'**
**சம்பாதித் 'தேன்'**
**சேகரித் 'தேன்'**
**அனுபவித் 'தேன்'**
**என்றான் சாலோமோன்.....**

..... ஆனால் முடிவில் இந்த **'தேன்'** எதுவுமே
அவனுக்கு இனிக்கவில்லை.....!

உம்முடைய தயவு என் நாவுக்கு
எவ்வளவு இனிமையானவைகள்:
என் வாய்க்கு அவைகள்
தேனிலும் மதுரமாயிருக்கும்...(சஸ்- 119, 103).

வாலிபர் பகுதி

# எகிப்தை நம்புகிறாய்....

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான வாலிப உள்ளங்களுக்கு நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இக்கட்டுரையின் வாயிலாக உங்கள் யாவரையும் சந்தித்ததில் மற்றட்ட மகிழ்ச்சி அடைகிறேன். தலைப்பில் காணும் வார்த்தைகள் அசிரிய ராஜாவாகியசனகெரிப்பின் படைத்தளபதியாகிய ரப்சாகேவால் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு உரைக்கப்பட்ட வார்த்தைகளாகும். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியோ ஆரம்ப நாட்களில் தேவனுக்கு பயந்து தேவன்மீது அபரிதமான நம்பிக்கை கொண்டிருந்த ஒரு ராஜாவாக இருந்தான். ஆனால் அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவுக்கு விரோதமாக படையெடுத்து வந்த போது அவன் எகிப்தை நம்பின படியால் தேவனை அறியாத ஒரு மனிதனை கொண்டு இந்த வார்த்தைகள் இவனுக்கு உரைக்கப்பட்டது. இதை (II ராஜாக்கள் 18:21) ல் நாம் வாசிக்கலாம். பொதுவாக நாம் பார்க்கும் போது இந்த எகிப்து தேசம் நைல் நதியின் கொடையாக வர்ணிக்கப்படுகிறது. பண்டைய காலத்தில் இந்த எகிப்து தேசம் நாகரீகம் மற்றும் கலாச்சாரத்தின் தொட்டிலாக இருந்திருக்கிறது. வேதாகமத்தில் எகிப்துக்கென்று ஒரு தனி இடம் உண்டு. யோசேப்பின் சகோதரர்கள் பஞ்சக்காலத்தில் ஆகாரத்திற்காக எகிப்துக்குத்தான் சென்றார்கள் . மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான் (அப்போஸ்தலர் 7:22). ஆனால் அதே நேரத்தில் எகிப்து தேசம் பாவத்தையும், அடிமைத்தனத்தையும் நமக்கு நினைவுப் படுத்துகிறது.

## I. தேவனை நம்புகிறவர்கள் எச்சூழ்நிலையிலும் அசைக்கப்படுவதில்லை

பொதுவாக, தேவன் மீது நம்பிக்கை வைத்து வாழ்பவர்கள் காரியங்கள் சுமூகமாக போய்கொண்டிருக்கும் போது தேவனோடு கொண்டிருக்கும் உறவில் எந்த விரிசலும் ஏற்படுவதில்லை. ஆனால் காரியங்கள் நமக்கு விரோதமாக எழும் போது நாம் விழுந்து போகிறோம். அதாவது தேவன் மீது கோண்டிருக்கும் நம்பிக்கையில் சறுக்கல் ஏற்படுகிறது. வேதத்தில் நாம் பார்க்கும் போது பக்தனாகிய யோபுவின் சரித்திரத்தை நாம் அலசி ஆராய முடியும். யோபு தன் வாழ்வில் மிகப்பெரிய பொருளாதார சேதத்தை

சந்தித்தார். சில நிமிடங்களில் யோபுக்கு உண்டான எல்லாம் சிதைந்து போயின. பலர் தங்கள் வாழ்வில் பொருளாதார பிரச்சனைகள் ஏற்படும் போது தேவன் மீது நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். அதன் விளைவாக தங்களையே இழந்துவிடுகிறார்கள். ஆனால் பக்தனாகிய யோபு எல்லா உடமைகளையும் இழந்துவிட்டாலும் கூட தேவன் மீதான நம்பிக்கையை மட்டும் இழக்கவே இல்லை. (Iதீமோத்தேயு 6:10) ல் நாம் பார்க்கும் போது பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது: சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம்.

அடுத்ததாக நாம் பார்க்கும் போது, பலருடைய குடும்பங்களில் நேரிடும் சோகச் சம்பவங்கள் தேவன் மீதான நம்பிக்கையை குன்றச் செய்து வருகின்றன. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேதாகம கதாபாத்திரமான யோபு தன்னுடைய பத்து பிள்ளைகளையும் சில நிமிடங்களில் இழந்துவிட்டார். ஆனாலும் தேவன் மீதான நம்பிக்கையை நழுவவிடவேயில்லை. அவர் அத்தனை இழப்புகளின் மத்தியிலும் சுத்த பக்தியோடு கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்றார். அதற்கு காரணகாரியங்களை தேடிக்கொண்டு அல்லது தேவன் ஏன் இதை எனக்கு அனுமதித்தார் என்று குருட்டுத்தனமாக தேவன் மீது பழிபோட்டு இழிசெயலில் ஈடுபடவில்லை. ஆனால் பலர் யோபுக்கு வந்தபாடுகளில் ஒரு சதவீதபாடுகள் வந்தால் கூட தேவன் மீதான நம்பிக்கையையும், சில நாட்கள் கழித்து தேவனிடமே தங்கள் உறவை குறைத்துக் கொள்கிறார்கள். ஆனால் யோபு அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று சொன்ன நம்பிக்கையின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள் (யோபு 13:15).

### II. தேவனை நம்புகிறவர்கள் அவர் தங்கள் தேவைகளை சந்திப்பார் என்று நம்புகிறார்கள்.

நம் வாழ்க்கையில் உண்டாகும் எல்லா நன்மைகளும் தேவனிடத்திலிருந்து தான் வருகிறது, நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்1:17). தேவன், நம் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை போன்றவைகளை முதலாவது அவருடைய ராஜ்ஜியத்தையும் நீதியையும் தேடும்போது சந்திக்கிறார் (மத்தேயு 6:33). இதன் பொருள் நாம் வேலை செய்யாமல் விருதாவாக சுற்ற வேண்டும் என்பதல்ல. வேலை வாய்ப்புகளும், நன்மைகளும் தேவனுடைய பராமரிப்பின் ஓர் அங்கமாக இருக்கிறது. சிலர் தங்கள் தேவைகள் அதிகமாக

இருப்பதாகவும், அதை தேவனால் சந்திக்க முடியாது என்றும் சிந்திக்கிறார்கள். பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது என்பதை நம்புவதில் அவர்களுக்கு பிரச்சனை இருக்கிறது. பல வேளைகளில் நம் வாழ்க்கையில் ஏற்படும் மலை போன்ற பிரச்சனைகளை எண்ணி மலைத்துப் போய்விடுகிறோம், நிலை குலைந்து போகிறோம். தேவன் நம்முடைய சரீரப்பிரகாரமான தேவைகளை மாத்திரமல்ல, ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறார். அவர் நமக்கு உணர்வுப்பூர்வமான பாதுகாப்பைத் தருகிறார் என்றால் என்ன என்று நீங்கள் கேட்கலாம். இவ்வுலகில் எத்தனையோ பேர் தங்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை, தங்களிடம் யாரும் அன்பு செலுத்துவதில்லை என்று ஏங்குகின்றனர். அவர்கள் தேவனுடைய உண்மையானஅன்புக்கும், இவ்வுலகத்தின் போலியான அன்பிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை கண்டறிந்து இவ்வுலகத்தின் மாயையான அன்பு வேண்டாம், தேவனுடைய உயரிய, உன்னதமான அன்பே தங்களுக்கு போதுமானது என்று திருப்தி அடைகின்றனர். நாம் நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்பி ஏமாற்றமடைகிறோம். மாற்றத்திற்காக ஏங்குகின்றோம், ஜீவனுள்ள தேவனை நாம் முழுமையாக நம்பி வாழ்க்கையில் எல்லாவற்றையும் செய்யும் போது நம் நம்பிக்கை வீண்போகாது.

### III. தேவனை நம்புகிறவர்கள் போதுமென்கிற மனதுடனே கூட இருப்பார்கள்

கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் எத்தனையோ தேவனுடைய ஆசீர்வாதங்களை ருசிபார்த்த போதும் கூட திருப்தியில்லாமல் இன்னும் வேண்டும் இன்னும் வேண்டுமென்று தேவனிடம் முறையிடுவதை நாம் காண்கிறோம். வேத வாக்கியங்களில் நாம் காணும் போது போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று காண்கிறோம். (I தீமோத்தேயு 6:6). இதன் பொருள் வாழ்க்கையில் மேம்பட அதிகமாக உழைக்கக்கூடாது, அதிகமாக சம்பாதிக்கக்கூடாது, அதே நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதல்ல. நாம் பேராசையுடையவர்களாக இல்லாமல் தேவன் நமக்கு தந்திருக்கிற வைகளில் திருப்திப்படவேண்டும் என்பதாயிருக்கிறது (பிலிப்பியர் 4:11) நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டேன் என்னும் பவுலின் வார்த்தைகளை நம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். பிரியமான வாலிபச் செல்வங்களே! தேவன் மீதான நம் நம்பிக்கை எந்த நிலையில் இருக்கிறது? அரைகுறையாக இருக்கிறதா? அல்லது முழுமையான அளவில் இருக்கிறதா? நம் வாழ்க்கையை சற்று உற்றுப் பார்போம். நம் வாழ்க்கை எனும் சக்கரம் தேவன் மீதான நம்பிக்கையில் நகர வேண்டும். அப்படி நகர்ந்தால், அது நடந்தால் தேவன் நம்மை ஆசீர்வாத மழையில் நனைப்பது திண்ணம். ★

சிறுவர் பகுதி

# தைரியமாய் இருங்கள்

Bro. ஏபில் நாயகம்

**ஹா**ய் குட்டீஸ், எப்படி இருக்கீங்க எல்லாரும்? நான் தேவனுடைய கிருபையால நல்லாயிருக்கிறோன். நன்றாக படித்துக் கொண்டிருக்கீறீர்களா? பெற்றோருக்கு கீழ்ப்படிகீறீர்களா? தவறாமல் சபைக்குச் செல்கிறீர்களா? இதையெல்லாம் சரியாக செய்து கொண்டிருக்கிறீர்கள் என நம்புகிறேன். சரி இந்த மாதத்திற்கான பாடம் என்னவென்று பார்க்கலாமா?

இந்த மாதம் கிதியோன் என்ற மனிதனைப் பற்றி கற்றுக் கொள்ளப் போகிறோம். கிதியோன் இஸ்ரவேல் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மனிதன். இஸ்ரவேல் நாட்டில் அப்போது வாழ்ந்தவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஏனென்றால், இஸ்ரவேல் தேசத்தை மீதியானியர்கள் பிடித்திருந்தார்கள். எனவே, தேவன் கிதியோனைக் கொண்டு இஸ்ரவேல் தேசத்தை மீட்கும்படி சித்தம் கொண்டார்.

கிதியோன் ஒரு சாதாரண மனிதன் . அவன் ஒரு போர் வீரன் இல்லை. போர் வீரர்களை எப்படிக் கையாளுவது என்றும் அவனுக்குத் தெரியாமல் இருந்தது. சொல்லப்போனால், இவன் குடும்பத்தில் அவன் சிறியவனாய், தைரியமில்லாதவனாய் இருந்தான். தேவன் கிதியோனிடம், நீ போர்வீரர்களை முன் நின்று வழிநடத்த வேண்டும் என்று சொன்ன போது, அவன் அதை நம்பவில்லை. தேவன் தான் தன்னோடு பேசுகிறார் என்ற நம்பிக்கையும் இல்லை. தேவன் சொல்வதையெல்லாம் தன்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு சுத்தமாக இல்லாமல் இருந்தது.

எனவே, தேவன் ஒரு தூதனை கிதியோனிடம் அனுப்பினார். நியாதிபதிகள் 6:12ல் பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்று அந்த தூதன் கதியோனிடம் சொன்னார் என்று வாசிக்கிறோம். தேவன் கிதியோனனுக்கு தைரியம் கொடுத்தார். தேவன் உனக்கு துணையாக இருப்பார் என்று தூதன் சொன்னார். கிதியோன் விசுவாசித்தான். அவன் தலைமையில் மீதியானியர்களை அவர்கள் தோற்கடித்தார்கள்.

பிள்ளைகளே! நீங்கள் எப்போதாவது கிதியோனைப் போல பயந்திருக்கிறீர்களா? புதிதாக ஒரு பாடம் படிக்கும் போதோ, அல்லது விளையாடும் போதோ, வேறெந்த காரியத்திற்காகவோ பயந்திருக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். கிதியோனுக்கு துணையாக இருந்து வெற்றிதந்த தேவன் உங்களோடும் இருந்து வெற்றி தருவார். நீங்கள் தேவனை விசுவாசித்தால், அவர் உங்களுக்கும் பெலன் தருவார். வெற்றிகளைத் தருவார். இனி பயப்படாதிருப்பீர்கள். சரியா?

தேவன் உங்களை பெலப்படுத்துவாராக! தைரியமாய் இருங்கள்! ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு,

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை செப்டம்பர் மாத இதழில்)**

(யோசுவா புஸ்தகத்தில் தேடி கண்டுபிடியுங்கள்)

1. இஸ்ரவேலர்கள் எதற்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்?
2. கர்த்தரின் ஆலயத்தில் பொக்கிஷமாய் சேர்க்கப்பட்டவைகள் யாது?
3. சாபத்தீடானதை எடுத்து மறைத்து வைத்தவன் யார்?
4. ஆவிக்கு நேராக நீட்டப்பட்ட ஆயுதம் எது?
5. உடன் படிக்கை பொட்டியின் இருபுறத்திலும் அமைந்திருந்த மலைகளின் பெயர்களை குறிப்பிடுக.
6. தந்திரமான யோசனை பண்ணினவர்கள் யார்?
7. கர்த்தருடைய வாக்கைக்கேளாமல் அவர்கள் பெற்றுக் கொண்டது என்ன?
8. பலிபீடத்திற்கு விறகுகளை வெட்டினவர்கள் யார்?
9. சூரியனும் சந்திரனும் தரித்து நின்ற இடங்களைக் குறிப்பிடுக.
10. வானத்திலிருந்து தேவன் விழப்பண்ணினது எது?

## ஜுலை மாத வினாக்களுக்கான விடைகள்

1. நூனின் குமாரன் யோசுவா
2. நியாயப் பிரமாயம்
3. சிவப்புக் கயிற்றை
4. ஜீவனுள்ள தேவன்
5. புரட்டிப்போடுதல்
6. பன்னிரண்டு கற்கள்
7. கர்த்தருடைய சேனையின் அதிபதி
8. தானியத்தை புசித்த மறுநாளிலே
9. ஏழுபேர்
10. ஏழு நாட்கள்

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| 1.செல்வம் | - | கோவை |
| 2.இந்திரா | - | ஜெபக்கனி |
| 3.ரூபவல்யா | - | தூத்துக்குடி |
| 4.ராஜேஷ் | - | சென்னை |
| 5.ஜெயராஜ் | - | கோவை |
| 6.சரண்யா | - | ஈரோடு |
| 7.மாலதிஜெயக்குமார் | - | தாராபுரம் |
| 8.அபினேஷ் | - | தாராபுரம் |
| 9.பால்ராஜ் | - | மதுரை |
| 10.சாந்தகுமாரி | - | நாசரேத் |
| 11.மாணிக்கவாசகம் | | திருச்சி |
| 12.சாமுவேல் மோகன்தாஸ் | - | சென்னை |
| 13.எஸ்ரா | - | பாகல்மேடு |
| 14.ப்ளோராசம்மா | - | திருப்பத்தூர் |
| 15.செல்வமணி குணசேகரன் | - | சென்னை |
| 16.பாக்கியம் சம்பூரணம் | - | ஈரோடு |
| 17.சாலமோன் | - | காங்கயம் |
| 18.ஆதாள் | - | கோவில்பட்டி |
| 19.பாரதி | - | கோபி |
| 20.ஜெயசிங் | - | சென்னை. |

# ஏற்றத் துணை

Bro. பாண்டியன்

கிறிஸ்தவ திருமணங்களில் தவறாமல் சுட்டிக் காண்பிக்கப்படும் வசனம், மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன், என்ற தேவனுடைய வார்த்தையாகும். பல திருமணங்கள் சொத்துளுக்காக செயல்படுகிறது. இன்னும் சில சொந்தங்களுக்காகவும், வாலிபத் தவறுகளின் நிமித்தம் கட்டாயத்திற்காகவும் செய்யப்படுகின்றன, ஆனால், தேவனுடைய சித்தம் அவனுக்கு ஒரு நல்ல துணையைக் கொடுக்க வேண்டும் என்பதே. திருமணத்தில் போட்டோ எடுக்கும் போது, சிரித்த, மாப்பிள்ளையை பார்த்து அவனுடைய நண்பர்கள் இது தான் 'கடைசி சிரிப்பு' என்று கேலி பேசுவதுண்டு: காரணம் அதன் பின் குடும்ப சுமை காரணமாக சிரிப்பதற்கும் நேரமிருக்காது என்பர். திருமணமாகாதவர்களுக்கு அது ஏதோ சிக்கிக்கொண்ட முறையைப் போலவும் இவ்வுலக ஞானிகள் திருமணத்தைப் பற்றி பல தத்துவங்கள் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் தேவனுடைய வார்த்தையின்படி விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் உள்ளது இங்கு யாவருக்குள்ளும் என்ற வார்த்தையானது மதம், மொழி, தேசம் கடந்து அனைத்து மக்களையும் குறிக்கிறதாயுள்ளது. ஆக, திருமணம் என்பது சமுதாயத்தில் ஒரு மரியாதைக்குரிய மதிப்புமிக்க காரியமாக உள்ளதென்று காண்கின்றோம். ஆனால், பெண்களை வெறும் போகப் பொருட்களைப் போல் சித்தரிப்பது பிசாசின் தந்திரமாகும். வாலிபர்கள் கடவுள் நமக்கு கண்ணையும் படைத்து பெண்களையும் படைத்திருப்பது அவர்களை ரசிக்கத்தான் என்று விதண்டாவாதம் செய்வதுண்டு. அதனாலேயே 'ஈவ் டீசிங்' எனப்படும் கேலிகளும், கிண்டல்களும் அரங்கேற்றுகின்றன. உண்மையில், பெண்களைப் பற்றிய உண்மை தெரியாதவர்களே அப்படி நடந்துகொள்கிறார்கள். ஒரு ஆண் இந்த சமுதாயத்தில் நல்லவனாக, யோக்கிய முள்ளவனாய் தலை நிமிர்ந்து வாழ அவனுக்கு ஒரு பெண்ணின் துணை தேவைப்படுகிறது என்பதே நிதர்சனமான உண்மையாகும். அதையே வேதம் ஏற்றத்துணை (ஆதியாகமம் 2:18) என்கிறது. அவனுடைய வாழ்க்கையில் நேர்மையாக நடக்க துணைபுரியவே தேவன் பெண்ணை உண்டாக்கினார்.

நாம் அறிந்தபடி மனிதன் தேவ சாயலாக படைக்கப்பட்டான். அவன் தேவனைப் போல சிந்தித்து, முடிவு எடுக்கும் திராணியை தேவன் அவனுக்கு கொடுத்திருந்தார். அதனால் தான் ஏவாள்

வஞ்சிக்கப்பட்ட போதும் ஆவிக்குரிய மரண தண்டனை ஆதாமுக்கு வழங்கப்பட்டது. அதனால் தான், குடும்பத்தில் தலைவன் கணவன் என்று ரேஷன் கார்டும் சொல்கிறது. வேதமும் ஸ்திரீக்கு புருஷன் தலை என்கிறது. ஆனால், பலர் மனைவி எடுக்கும் தவறான முடிவுகளுக்கு தலையாட்டிக்கொண்டு யேசபேலின் கணவனான அரசன் ஆகாப்பை போல் தேவனால் வெறுக்கப்படுகிறார்கள். எனவே, தேவன் மனிதனுக்கு 'ஏற்றத்துணையை' கொடுத்ததின் முக்கிய நோக்கமே அவனுக்குள் இருக்கும் 'தேவ சாயலை' (பராமரிக்க) 'மெய்ன்டேயின் பண்ணவே' ஆகும். எப்படி ஒரு தொழிற்சாலையில் நடக்கும் பல பணிகள் தொடர்ந்து நடக்க, தடைபடாமல் இருக்க கண்காணிப்பு, பராமரிப்பு தேவைப்படுகிறதோ அதை போல ஒரு தனி மனித ஒழுக்கம், தொடர்ந்து பராமரிக்கப்படவே தேவன் அவனுக்கு ஏற்றத்துணை ஏற்படுத்தினார்.

ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடி இருப்பது நலம். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும் என்று ஞானி சாலமோன் சொல்கிறார் : (4:9-12) ஆகவே, நாம் சபையில் விசுவாசிகளாய் வாழ்ந்து தேவனுக்கு கனி கொடுக்க வேண்டுமானால் அவரவர்களுக்கு ஏற்றத் துணை அவசியம் என்பதை உணரவேண்டும்.இல்லையெனில் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்ற உலகக் காரியங்களில் சிக்கி பிசாசின் தந்திரங்களுக்கு உட்பட்டு தேவனுக்கு பிரியமாய் வாழ இயலாதவர் ஆவோம். திருமண உறவுகள் சரியாக பராமரிக்கப்படாத காரணத்தினால் தான் சமுதாயத்தில் வன்முறை, கற்பழிப்பு போன்ற அவலங்கள் நடைபெறுகின்றதை நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம். பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உரிய வயதில் திருமணம் நடைபெற ஜெபிக்க வேண்டும். பெரும்பாலான திருமணங்கள் பொருளாதாரக் குறைபாட்டால் தள்ளிப் போகிறது. இது தவறான காரியம். வாலிபப் பிள்ளைகள் தவறி பிசாசின் தந்திரங்களில் விழுந்து போவதற்கு தாமதமான திருமணங்களும் ஒரு காரணமாகும்.

இன்றைய சமுதாயத்தில் மிக ஏழ்மையில் இருப்பவர்கள் அல்லது நல்ல வசதிபடைத்தவர்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற வயதில் திருமணம் நடைபெறுகிறது. ஆனால், நடுத்தரக்குடும்பங்களே திருமண வயது தள்ளிப்போகும் ஆபத்தை சந்திக்கிறார்கள். அதனால் நம் சமுதாயத்தில் திருமண ஆடம்பரங்கள் குறைக்கப்பட வேண்டும். தேவன் தாமே அந்த சிந்தையை விசேஷமாகத் தம் மக்களுக்கு அருள்வாராக. பிள்ளைகளின் ஒழுக்கத்திற்கு திருமணம் அவசியம் என்பதை முதலில் பெற்றோர்களும் உணரவேண்டும். ஆபிரகாமுக்கு தேவன் நல்லதொரு மனைவியை கொடுத்திருந்தார். வயதான காலத்திலும் வழிப்போக்கர்கள்

உபசரிக்க ஆபிரகாம் கேட்டுக்கொண்ட போது, ஸ்டவ், குக்கர், மிக்ஸி இல்லாத காலத்திலேயே சாராள் எதிர்த்துப் பேசாமல் உணவை, அதுவும் அசைவ உணவை ஆயத்தம் செய்து கொடுத்தாள். அப்படிப்பட்ட ஒத்தாசையான மனைவியும் ஆபிரகாமின் விசுவாசத்திற்கு காரணமாக இருந்திருக்கலாம். அதே வேளையில் கீழ்ப்படியாத, பொருளாசை மிகுந்த லோத்தின் மனைவியும் லோத்து 'நீதிமான்' என்று பேரெடுக்க உதவினாள். (2பேது2:8). சிம்சோனை தேவன் சொன்னபடி வளர்க்க மனோவாவுக்கு தன் மனைவியின் துணை அவசியமாயிருந்தது (நியா 13:9).

வாழ்க்கையை வீணடித்து கொள்வதை வேதனையோடு காண்கிறோம். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்படி ஒவ்வொரு ஆத்துமாவும் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசத்தைப் பின்பற்றி வாழவே, தேவன் தம் குமாரனுடைய ராஜ்ஜியமாகிய கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தியுள்ளார். அந்த சபை வாழ்க்கையில் நாம் தேவனுக்குப் பிரியமாய் வாழ நமக்கு ஏற்றதுணையை தேவன் தந்திருக்கிறார். ஆகவே, அவர்கள் உதவியோடு கிறிஸ்துவுக்குள் நாம் தேறி அவர்களையும் தேற்றி (1பேது 3:7) தேவனுக்கு பிரியமாக வாழ்வோம். கிறிஸ்துவின் கிருபையும் தேவ ஆசீரும் உங்கள் அனைவருக்கும் உண்டாவதாக. ஆமென் ★

## 70 கிலோ கிராம் எடையுள்ள மனித உடலில் உள்ள மூலப் பொருட்கள்:

| | |
|---|---|
| 1. ஆக்ஸிஜன் | 43 கிலோ கிராம். |
| 2. கார்பன் | 16 கிகி |
| 3. ஹைட்ரஜன் | 7 கிகி |
| 4. நைட்ரஜன் | 1.8 கிகி |
| 5. கால்சியம் | 1.0 கிகி |
| 6. பாஸ்பரஸ் | 780 கிராம் |
| 7. பொட்டாசியம் | 140 கிராம் |
| 8. சோடியம் | 100 கிராம் |
| 9. குளோரின் | 95 கிராம் |
| 10. மக்னீசியம் | 19 கிராம் |

இன்னும் பல்வேறு மூலப்பொருட்கள் உள்ளன.

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

**ஏ**சாயா 6:8 ஏசாயாவை தீர்க்க தரிசன ஊழியத்திற்கென அழைக்கும் தேவன் பின்பு ; யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாகப் போவான்' என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்.... என்று ஏசாயா குறிப்பிடுகிறார். இங்கே ஆண்டவர் என்று குறிப்பிடப்படுவது எபிரெயச் சொல் 'அடோனஸ்' (எண் 3038). யோவான் 13:13, 14 ல் இயேசு தம்மை 'போதகர்' என்றும் 'ஆண்டவரென்றும்' தமது சீஷர்கள் அழைப்பது சரியே' என்று குறிப்பிடுகிறார். கர்த்தருடைய தூதனானவர் எனும் பெயரில் வந்தவரை ஆபிரகாம் 'ஆண்டவர்' என்று குறிப்பிட்டு பேசப்பட்டவர் இவரே. சங்கீதம் 110 :1 ல், 'கர்த்தர் ஆண்டவரை நோக்கி' என்று தேவனாகிய கர்த்தரால் அழைக்கப்பட்ட 'ஆண்டவர்' இவரே! இயேசு இதை யோவானில் வலியுறுத்தினார். இவர் தான் தேவத்துவக் குடும்பதின் சார்பில் பேசுகிற தேவனாகிய கர்த்தர் 'நான்' என்றவர், அடுத்து 'நமது' என்று பன்மையில் குறிப்பிடுகிறார், ஒருவரே மூன்று பரிமாணங்களைப் பெற்றிருந்தால் நமது என்ற வார்த்தைக்கு இங்கே இடமிருந்திருக்காது. இதுவும் பன்மையைக் குறிக்கும் ஒருமையே அப்போஸ்தலர் 2:34,35 ல்.... நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று தாவீதின் சங்கீதத்தை பேதுரு மேற்கோள் காட்டுகிறார். எந்த கர்த்தர் எந்த ஆண்டவருடனே சொன்னார்? தேவனாகிய கர்த்தர் ஆண்டவராகிய இயேசுவுடனே சொன்னார் என்பது தானே உண்மை? தேவனாகிய கர்த்தர் தமது வலது புறத்தில் தம்மையே உட்காரச் சொன்னாரா? திரித்துவக் கொள்கையாளர்கள் இதற்கு பதில் காட்டும்.

தனித்துவக் கொள்கைகாரர்களே 'கர்த்தர்' என்பதற்கும் 'ஆண்டவர்' என்பதற்கும் என்ன வேறுபாடு? நீங்கள் எதையாகிலும் சொல்லித் தப்பிக்க நினைக்கும் முன் 1 கொரிந்தியர் 1:2, 8:6 ஐ வாசிப்பது நலம். இயேசு கிறிஸ்துவுக்கு பவுல் இங்கே கர்த்தராகிய இயேசு என்று சொல்லியிருப்பது பொய்யா? தேவனுக்கு (பிதாவுக்கு) மட்டும் தான் கர்த்தர் எனும் தகுதி உள்ளதென்றால் இயேசுவுக்கும் சொல்லப்பட்டது ஏன்? கர்த்தர் எனும் பதம் ஆண்டவர் எனும் அர்த்தம் தானே?

எங்களுக்கு பிறந்த மகன்கள் (ஆண்கள்) இரண்டு பேர். மூத்த மகன் பெயர் மேக்கோல் ராஜ்குமார், இளையவர் பெயர் ஸ்டேன்ஸி மைக்கோல். என்னுடைய பெற்றோர் எனக்கு வைத்த பெயர் ஆறுமுகம். நான் கர்த்தரை ஏற்றுக்கொண்ட பிறகு நானாக சிலருடைய பெலவீனத்தினிமிர்த்தம். மைக்கேல் என்று துணைப் பெயரைக் சேர்த்துக் கொண்டேன். (விலையில்லாமல் கிடைப்பது இது மட்டும் தானே). இப்போ, என் குடும்பத்தின்,

| <u>பெயர்</u> | <u>ஸ்தானம்</u> | <u>தன்மை</u> |
|---|---|---|
| E.A. மைக்கேல் ஆறுமுகம் | தகப்பன் | மனுஷன் |
| மைக்கேல் ராஜ்குமார் | மூத்தமகன் | மனுஷன் |
| ஸ்டேன்லி மைக்கேல் | இளையமகன் | மனுஷன் |

இதில் குடும்பப் பெயர் மைக்கேல் மூவருக்கும் உரியது. குடும்பத்தில் எங்கள் மூவருக்கும் வேறுபட்ட ஸ்தானம். மூவரின் தன்மை ஒன்றே. மனுஷன் மைக்கோல் என்பது மூவருக்கும் பொருந்துகின்ற பொதுப் பெயராயினும், எங்களுக்கென்று சூட்டப்பட்ட பெயர் வேறு வேறு. இப்போ, தேவனுடைய குடும்பத்தில்,

1. பிதாவாகிய தேவன் (யோகோவா) – தகப்பன் – தெய்வத் தன்மை

2. குமாரனாகிய தேவன்(யோகோவா கிறிஸ்து)– குமாரன் – தெய்வத் தன்மை

3. பரிசுத்த ஆவியாகிய தேவன்(தேற்றரவாளன்) – ஆவியானவர் – தெய்வத் தன்மை

நான் மனுஷத்தன்மையுடையவனாயிருப்பது போல, என் குமாரர்களும் மனுஷத் தன்மையுடையவர்கள் தானே. பெயர்களும், ஸ்தானங்களும் வேறுபட்டிருந்தாலும், பிதா குமாரன் பரிசுத்த ஆவி மூவரும் தெய்வீகத் தன்மை உடையவர்கள் தானே. பிதா மட்டும் தெய்வத் தன்மையுடையவர், என்றால் அவருடைய குமாரன் வேறு என்னவாக இருப்பர். திரித்துவ மற்றும் தனித்துவக் கொள்கையாளர்கள் புரிந்து கொள்வார்களா? ★

---

**மண்ணிலிருந்து மனிதன் வந்தான் என்று பல ஆயிர வருஷமாக பைபிள் சொல்கிறது. இதை அறிவியல் உண்மை மெய்பித்தது.**

# உண்மையை அறிந்து கொள்ளுங்கள்

Bro. ஹென்றி மோகன்

இத்தலைப்பின் கீழ் கடந்த இதழில் சிருஷ்டிப்பின் வரலாற்றில் உள்ள உண்மைகளை அறிந்து கொள்ளும் படி வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தோம். இந்த இதழில் அதன் தொடர்ச்சியை ஆராய்ந்து பார்க்கவிருப்பதால் முன்னுரையாக சிலவற்றை உங்கள் நினைவுக்கு கொண்டு வருகிறேன்.

தேவனாகிய கர்த்தர் முதல் மனிதனாகிய ஆதாமையும், முதல் மனுஷியாகிய ஏவாளையும் உண்டாக்கும் முன் மனிதன் உலகத்தில் வாழ்வதற்குத் தேவையான வெளிச்சம், வானம் என்கிற ஆகாயவிரிவு, சமுத்திரம், மற்றும் வெட்டாந்தரையை உண்டாக்கினார். பின்பு தேவன் பூமியானது புல்லையும், விதையையும் பிறப்பிக்கும் பூண்டுகளையும், கனி விருட்சகங்களையும் முளைப்பிக்கச் செய்தார். ஆகாயவிரிலில் சுடர்களை உண்டாக்கி அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும், நாட்களையும், வருடங்களையும், குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். பகலையும், இரவையும் ஆளவும் வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசத்தை உண்டாக்கவும் அவைகளை வானம் என்கிற ஆகாயவிரிவில் வைத்தார். பின்பு தேவன் நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், பறக்கும் பறவைகளையும், உண்டாக்கினார்.

ஆனால், சிருஷ்டிப்புகள் யாவும் அழிந்து போககூடியது என்றும் (11பே 3:10) காணப்படுகிறவைகள், அந்ததிய மானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (11கோ 4:18) என்றும் தேவனால் அருளப்பட்டுள்ள வெதகாமத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவனாகிய கர்த்தரோ ஒருவராய் சாவாமையுள்ளவரும் சேரக்கூடாதது. ஒளியில் வாசம் பண்ணுகிறவரும். மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரம். காணக்கூடாதவருமாயிருக்கிறார் (1தீ 6:16). எனவே, அநித்தியமானதும் அழிந்து போக கூடியதுமான சிருஷ்டிப்புகளைத் தொழுது சேவியாமல் அழிவில்லாதவரும் நித்தியமான வருமான தேவனாகிய கர்த்தர் ஒருவரையே தொழுது கொள்ள வேண்டும் என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள். உண்மை உங்களை அறியாமையிலிருந்து விடுதலையாக்கும்.

பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2: 7)

மனுஷன் உயிர் வாழ்வதற்கு ஜீவனையும், சுவாசத்தையும் கொடுக்கிறவரும் தேவனாகிய கர்த்தரே (அப் 17:25) மேலும், தேவன் மனுஷன் தம்முடைய சாயலாகவும் சிருஷ்டித்தார் (ஆதி 1:27).

மனுஷனை உண்டாக்கின தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கி நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி 1: 27-28) ஆதியில் உண்டாக்கப்பட்ட ஆதாம் ஏவாளிலிருந்து பெருகத் துவங்கின மனுகுலம் உலகமுழுவதிலும் ஒரே விதமான சரீர அமைப்பு கொண்டவர்களாக இருப்பதைப் பார்க்கும் போது தேவனாகிய கர்த்தர் ஒருவரே மனிதனை உண்டாக்கினவர் என்ற உண்மை வேதகாமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்றும் (உபா 5:7) நீங்கள் உங்களை கெடுத்துக் கொண்டு ஆண் உருவும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும் அவைகளை தொழுது சேவிக்க இணங்காதப்படிக்கும் உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள் என்று தேவனாகிய கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார் (உபா 4:16-19).

மேலும், மனிதனுடைய சுவாசம் தேவனுடைய கரத்தில் வைத்திருக்கிறார்(தா5:23). எனவே, ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரம் இல்லை. மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரம் இல்லை(பிர 8:8) என்று மனுஷனுடைய நிலையை குறித்து வேதகாமத்தில் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலையில், மனுஷன் தனக்கு தேவர் களை உண்டுபண்ணலாமோ (எரே 16:20) தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள் எந்த சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள் (ஏசா40:18) என்று சிந்தித்துப் பாருங்கள். அழிந்து போகிற மனுஷன் அழியாத தேவனை உண்டுபண்ணக் கூடுமோ! மனிதனால் இது கூடாதது என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள்.

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்(1 கொரி 8:6). இந்த உண்மை மனுஷருக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை வெளிப்படுத்தியிருக்கிறார், எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருகிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய் காணப்படுகிறது. ஆதலால், தேவனை குறித்து அறியோம் என்று ஒருவரும் போக்குச் சொல்ல இடமில்லை. அப்படியிருந்தும் அநேகர் தேவனை குறித்து அறிந்தும் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள் .தேவனுடைய உண்மையை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள். தேவனாகிய கர்த்தரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் ஆமென் (ரோ 1:19-25).

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. உண்டாக்கப்பட்டிருப்பவர்கள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. மனுஷனோ தேவனாகிய கர்த்தருக்கென்று உண்டாக்கப்பட்டிருக்கிறார். ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இன்றைக்கு வரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி தொழுது கொள்வதும் அதற்கு படைக்கப்பட்டதை புசித்தும் வருகிறார்கள் (கோ8:6-7). இது மனுஷனுடைய அறியாமையை வெளிப்படுத்துகிறது.

எனவே, மனுஷனை சிருஷ்டிக்கவும் அவன் உயர்வை சுவாசத்தை கொடுக்கவும், சுவாசத்தை எடுக்கவும் அதிகாரம் படைத்த தேவனாகிய கர்த்தர் ஒருவரை மட்டுமே தொழுது கொள்ள வேண்டும் என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள். உண்மை உங்களை அறியாமையிலிருந்து விடுதலையாக்கும்.

- தொடர்ச்சி அடுத்த இதழில் ★

## ஞானியின் கூற்றைக் கவனியுங்கள்

★ எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது.

★ உயர ஏறும் மனுசனுடைய ஆவியையும், தாழப் பூமியில் இறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?

★ இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையே அல்லாமல், வேறே நன்மை இல்லை என்று கண்டேன். இதுவே அவன் பங்கு, தனக்கு பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப் பண்ணுகிறவன் யார் ?

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி:** ஒரு கிறிஸ்தவன் மனச்சோர்வாயிருப்பது பாவமாகுமா?

கவலைப்படுவது பாவமாகுமா? ஆம், இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளையும், அப்போஸ்தலர்களின் உபதேசத்தையும் நாம் கவனித்தால் பாவம் என்றுதான் பதில் வருகிறது. ஆனால், வேதாகமம் வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்கள் ஒருவரை மனச் சோர்வடையச் செய்கிறது என்று சொல்கிறது. அழுகிறவர்களோடு நாமும் அழவேண்டுமென்று கட்டளைப் பெற்றிருக்கிறோம். இதன் பொருள் துக்கப்படுகிறவர்கள் மீது நாம் பாவப்பட வேண்டும். துக்கப்படுவதெல்லாம் பாவமென்று சொல்லி அவர்களை தர்மசங்கடப்படுத்தக்கூடாது.

கிறிஸ்தவர்கள் துக்கமாகச் செய்யும் காரியங்கள் ஒன்றிலே அவர்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. இல்லையென்றால், மிகப்பெரிய அளவில் மனச்சோர்வை ஏற்படுத்துகிறது. ஆகவே, இக்கேள்வியை நாம் லேசாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இக்கேள்விக்கு சுலபமான ஆம், இல்லை, பதில் இல்லை.

**இக்காரியத்தைக் குறித்து பவுலின் வியாக்கியானம்.**

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றை யுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்'' (பிலிப்பியர்4:69).

வாழ்க்கையில் பல காரியங்களைச் சொல்வது எளிது. ஆனால், சொல்வது கடினம். கவலைப்படாதே என்னும் புத்திமதியும் அந்த வகையைச் சார்ந்ததுதான்? கவலைப் படாதே என்று சொல்வது நல்ல புத்திமதி மட்டுமல்ல அது வேதாகம கட்டளையும் கூட. கவலைப்படக் கூடாது என்று நமக்கு எப்படி கட்டளைக் கொடுக்கப்படலாம்? நம் வாழ்க்கையில் சில காரியங்கள் நடக்கும் போது கவலை என்பது தவிர்க்க முடியாத மனித உணர்வு தானே? இம்மனநிலையை நாம் இன்னும் கொஞ்சம் விளக்குவோம்.

வரப்போகிற தீமையான அல்லது மோசமான காரியங்களை நினைத்து பயந்து மனதிற்குள் ஏற்படும் ஒரு படபப்புதான் கவலை. இது ஒரு வேதனையுள்ள அனுபவமாகும். இது பெரும்பாலும் வியர்வை, பதட்டம் மற்றும் இதயம் வேகமாகத் துடித்தல் போன்றவைகளில் வெளிப்படுகிறது. ஒரு பிரச்சனையை ஒரு கிறிஸ்தவன் சமாளிக்க முடியாமல் சுய சந்தேகம் அவரை ஆட்கொள்ள அந்த நபர் அனுமதிக்கக் கூடாது. தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? என்று ஒரு கிறிஸ்தவனுக்கு சொல்லப்பட்டிருக்கிறதே (ரோமர்8:31). கவலை நம்மை மூழ்காதபடி நாம் அதை மேற்கொள்ளத்தக்கதாக வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் தேவ ஆலோசனையை கவனிப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கவலையைப் பற்றி சொல்லும்போது நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் என்று சொல்கிறார் (பிலிப்4:6). இங்கே பவுலின் வாக்கியம் ஒரு கட்டளை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு விரிவான கட்டளை. ஏனென்றால், நாம் எதற்கும் கவலைப்படக் கூடாது. எல்லா கட்டளைகளைப் போல இக்கட்டளைக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும். இது நிரந்தரத் தேவையாயிருக்கிறது. நம் ஜீவியங்கள் கவலைகள் சந்தேகங்கள் இல்லாத தேவனை முற்றிலும் சார்ந்த ஒன்றாக இருக்க வேண்டும்.

நம் இரட்சகர் மத்தேயு 6:25–ல் கூட கவலைப்படாதிருங்கள் என்று சொல்வதை நாம் கவனிக்க முடியும். நம் பரம பிதா பிழைப்பூட்டுகிறபடியால் நாம் எதற்காக கவலைப்பட வேண்டுமென்று கேட்கிறார் (மத்தேயு 6:25–31). கவலையால் ஒரு பிரச்சனையைத் தீர்க்க முடியாது, வருங்காலத்தை மாற்றி அமைக்க முடியாது. பின்பு எதற்காக நாம் கவலைப்பட வேண்டும்?

பவுல் கவலைப்படக் கூடாதென்று தடைவிதித்து விட்டு அதற்கான தீர்வையும் சொல்கிறார், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலிப்பியர் 4:6) என்று.

உங்கள் கவலைளை உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்வதற்குப் பதிலாகவும் மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாகவும் தேவனிடத்தில் சொல்லுங்கள். எதைக்குறித்தும் கவலைப் படாமல் இருந்து எல்லாவற்றையுங்குறித்து தேவனிடத்தில் பேசுங்கள். இது அதிகப்படியான கவலைக்கு அருமருந்தாகும். நாம் இதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அதிகமாகக் கவலைப்படுகிறோம். அது எந்த விதத்திலும் பயன்படாது.

# நம் இளைய தலைமுறைக்கு என்ன தேவை ?

Bro. சார்லஸ் பாக்ஸ்

நம்மிடத்தில் அருமையான இளம்பிள்ளைகள் இருக்கிறார்கள். இந்த இளம் வயதினருக்கு பெற்றோரிடமிருந்தும் மூத்த கிறிஸ்தவர்களிடமிருந்தும் சிறந்த மூன்று காரணங்கள் தேவை. அப்போஸ்தலனாகிய பவுல் நம்மில் ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. என்று எழுதுகிறார் (ரோமர்14:7). நாம் செய்கின்ற செயல்கள் மற்றவர்கள் மீது நிச்சயமாகத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பெற்றோர்கள் செய்யும் காரியங்கள் பிள்ளைகள் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சண்டையிட்டாலோ மது பானம் அருந்தினாலோ ஒருவரையொருவர் சபித்துக் கொண்டாலோ பொய்ச் சொன்னாலோ அநாகரிகமாக ஆடை உடுத்தினாலோ அது மிக மோசமான உதாரணமாக பிள்ளைகளுக்கு முன்பாக மாறிவிடும். இத்தகையை தவறுகளை தவிர்ப்பதற்கு ஒரே வழி அவர்கள் இல்லாத இடத்திலும், அதாவது எல்லா இடங்களிலும் சரியானதைச் செய்வதுதான்.

பெற்றோர்கள் தங்கள் செயல்கள் பிள்ளைகள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்ப்படுத்தாது என்று நினைக்கலாம் அப்படி நினைத்தால் அது அவர்கள் தவறு. பெற்றோர்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (எபேசியர் 6:4). பயிற்சியின் பெரும்பகுதி பிள்ளைகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகயிருப்பது தான்.

ஆபிரகாமும் யோவாவும் சிறந்த தகப்பன்மார்களுக்கு மிகச்சிறந்த மூன்று உதாரணங்களாக இருக்கிறார்கள். (ஆதியாகமம் 18:19; யோசுவா 24:15). இவ்விரு தேவ தாசர்களும் கர்த்தரைச் சேவிக்கிற காரியத்தில் தங்கள் குடும்பங்களை மிகச்சிறப்பாக வழி நடத்தியிருக்கிறார்கள். அன்னாள்போல் தாய்மார்கள் இன்று அதிகமாக தேவைப்படுகிறார்கள். அன்னாள் கர்த்தரிடத்தில் உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன் என்று ஒரு பொருத்தனைப் பண்ணினாள் ( சாமுவேல் 1:11). அன்னாளைப் போல் தாய்மார்கள் இருந்தால் சாமுவேல் போன்ற குமாரர்கள் நிச்சயமாக இருப்பார்கள். ஆபிராகமைப் போன்ற தகப்பன்மார்களால்தான் ஈசாக்கைப் போன்ற குமாரர்களை உருவாக்க முடியும்.

பிள்ளைகள் சிறுவயதிலேயே அப்பா அம்மாவுக்கு எது விருப்பமோ அதை விரும்பத் தொடங்கி விடுகிறார்கள். அதே போல், அப்பா அம்மா எதை வெறுக்கிறார்களோ அதை அவர்களும் வெறுக்கத் தொடங்கிவிடுகிறார்கள். எனவே, பெற்றோர்கள் தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் முதலிடம் கொடுக்கும்போது பிள்ளைகள் தங்களாகவே ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விடுவார்கள். ஆனால், நாம் கர்த்தருடைய காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் உலகப் பிரகாரமான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. நம் பிள்ளைகள் நம்மிடத்தில் எதைக் காண்கிறார்கள்? **பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்** (நீதிமொழிகள்22:6).

இவ்வுலகத்திற்கான நம்பிக்கை கிறிஸ்தவ குடும்பங்களால் உருவாக்கப்படும். நம் இளையதலைமுறையினர் நமக்கு மிகச்சிறந்தச் சொத்துக்களாக இருக்கின்றனர். அவர்கள் எவைகளைக் கற்றுக் கொள்ள வேண்டுமோ அவைகளை அவர்களுக்கு போதிக்கத் தேவன் தாமே நமக்கு ஞானத்தைத் தந்தருளுவாராக **இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்** (சங்கீதம் 127:45).

★

## நாளும் நடப்பும்

- **தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சரும், மூத்த அரசியல் வாதியுமான கலைஞர் கருணாநிதி காலமானார்.**
- **மாநிலங்களவை உறுப்பினர்கள் 22 மொழிகளிலும் பேசலாம் – வெங்கய்யா நாயுடு அறிவிப்பு.**
- **உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயதை உயர்த்தும் எண்ணமில்லை – மத்தியஅரசு.**
- **உலக தடகள சாம்பியன் பட்டத்தை இந்தியாவைச் சேர்ந்த விவசாயின் மகள் ஹிமாதால் தட்டிச்சென்றார்.**
- **கேரளாவில் கொட்டித் தீர்க்கும் மழை. கர்நாடக அணைகளில் நீர் திறப்பு அதிகரிப்பு.**